

கோவில்பட்டியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐடியுசி ஆட்டோ தொழிற்சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

## ஏஐடியுசி ஆட்டோ தொழிற்சங்கம் ஆர்ப்பாட்டம்

● கோவில்பட்டி

மத்திய அரசு கொண்டு வந்துள்ள 3 குற்றவியல் சட்டங்களை திரும்ப பெற வேண்டும். கோவில்பட்டி இளையரசனேந்தல் சாலையில் ரயில்வே சுரங்கப்பாதைக்கு இருபுறமும் அணுகுசாலை பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, கோவில்பட்டியில் ஏஐடியுசி ஆட்டோ தொழிற்சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

பயணியர் விடுதி முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ஜி.பாபு தலைமை வகித்தார். மாநிலத் தலைவர் காசி விஸ்வநாதன், மாவட்டச் செயலாளர் லோகநாதன், மாவட்டத் தலைவர் கிருஷ்ணராஜ் உள்ளிட்டோர் பேசினர். இந்திய கம்யூனிஸ்ட் நகரச் செயலாளர் சரோஜா, ஏஐடியுசி ஆட்டோ தொழிற்சங்க வட்டாரத் தலைவர் முனியசாமி, இளைஞர் பெருமன்ற நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



தூத்துக்குடி சுந்தரவேல்புரத்தில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தை கனிமொழி எம்.பி., திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார்.

## தூத்துக்குடி சுந்தரவேல்புரத்தில் அங்கன்வாடி மையம், ரேஷன் கடை திறப்பு விழா

● தூத்துக்குடி

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட சுந்தரவேல்புரத்தில் தனியார் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதி மூலம் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையம், பரிமா காலனியில் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை திறப்பு விழா நடந்தது.

தமிழக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் முன்னிலை வகித்தார். கனிமொழி எம்.பி. புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, தனியார் நிறுவனம் சார்பில் கல்லூரி மாணவ, மாணவிகள் 80 பேருக்கு ரூ.27 லட்சம் மதிப்பிலான ஊக்கத்தொகை வழங்கி பேசியதாவது:

படிக்க வேண்டும் என்று நினைக்கக் கூடிய மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்காக புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களை தமிழக முதல்வர் தொடங்கி அரசு பள்ளிகளில் படித்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி பயில மாதம் ரூ.1,000 வழங்கி வருகிறார். சமுதாயத்தில் மறுமலர்ச்சியை, எழுச்சியை உருவாக்கக்கூடியது கல்வி என்பதை கருத்தில் கொண்டு மாணவர்கள் நன்றாக படிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) இரா.ஐஸ்வர்யா, தனியார் நிறுவன துணைத் தலைவர் பி.தென்னவன், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) முரளி கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கோவில்பட்டி குறுவட்ட அளவில்

# மாணவர்களுக்கான சதுரங்க போட்டி

● கோவில்பட்டி

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்பில் கோவில்பட்டி குறு வட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை இந்த கல்வியாண்டில் இல்லத்தார் நடுநிலைப்பள்ளி நடத்தி வருகிறது. நேற்று சதுரங்க போட்டி இலக்குமி ஆலை மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்தது.

போட்டிகள் 11, 14, 17, 19 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு தனித்தனியாக நடத்தப்பட்டன. இதில், சிறப்பு விருந்தினர்களாக இல்லத்தார் நடுநிலைப்பள்ளி செயலாளர் கே.சங்கரன், பள்ளி தலைமை ஆசிரியை மா.இசக்கியம்மாள், இலக்குமி ஆலை மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் எம்.சண்முகராஜ், வட்டார கல்வி அலுவலர் சி.பத்மாவதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டிகளை உடற்கல்வி இயக்குநர்கள் ஜே.ஏ.பீட்டர் டைட்டஸ், ஆர்.காளிராஜ் மற்றும் குழுவினர் நடத்தினர். போட்டியில் கோவில்பட்டி குறுவட்டத்தில் உள்ள 50-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து சுமார் 300 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விளையாடினர். இதில், 11 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் பிரிவில் முதலிடத்தை மாணவர் ஜி.தன்வந்த், 2-வது இடத்தை மாணவர் ஸ்ரீவிஸ்வா, 3-வது இடத்தை மாணவர் எம்.சுந்தரமகாலிங்கம் ஆகியோர் பிடித்தனர். 14 வயதுக்கு உட்பட்ட பிரிவில் மாணவர்கள் பி.சூரிய புத்திரன், எஸ்.ஜிநேசன் 2-வது இடத்தையும், எம்.அர்ஜூன் 3-வது இடத்தையும் பிடித்தனர். 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் மாணவர்கள் கே.தமிழ் செழியன் முதலிடத்தையும், பி.அன்புசெல்வன் 2-வது இடத்தையும், பி.கங்காதர் 3-வது இடத்தையும் பிடித்தனர். 19 வயதுக்கு உட்பட்ட பிரிவில் மாணவர்கள் என்.பி.சந்தோஷ் பாபு முதலிடத்தையும், ஆர்.ரகுநாத் 2-வது இடத்தையும், எஸ்.மனோஜ் 3-வது இடத்தையும் பிடித்தனர்.

11 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் பிரிவில் முதலிடத்தை மாணவி பி.பிரதீபா, 2-வது இடத்தை ஜி.வரசர்வதா, 3-வது இடத்தை எஸ்.கனிஷ்கா ஆகியோர் பெற்றனர். 14 வயதுக்கு உட்பட்ட பிரிவில் ஜெ.கிளாடியா ரோஸ் முதலிடத்தையும், எம்.ஹேமா ஸ்ரீ 2-வது இடத்தையும், பி.அபிநயா 3-வது இடத்தையும் பெற்றனர். 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் கே.சுப்புலட்சுமி முதலிடத்தையும், பி.ஸ்வேதா 2-வது இடத்தையும், டி.ராகாஶ்ரீ 3-வது இடத்தையும் பெற்றனர். 19 வயதுக்கு உட்பட்டவர்கள் பிரிவில் எம்.சர்மிளாஶ்ரீ முதலிடத்தையும், எம்.மகிபா 2-வது இடத்தையும், பி.பிரியதர்ஷினி 3-வது இடத்தையும் பிடித்தனர்.

வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் அடுத்த கட்டமாக வருவாய் மாவட்ட அளவில் நடைபெற உள்ள போட்டிகளில் கலந்து கொண்டு விளையாட உள்ளனர். போட்டிகளுக்கான ஏற்பாடுகளை இல்லத்தார் நடுநிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியரும் குறுவட்ட செயலாளருமான ஜெ.ஜெயக்குமார் செய்திருந்தார்.



கோவில்பட்டி இலக்குமி ஆலை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்த குறுவட்ட அளவிலான சதுரங்க போட்டியில் மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் விளையாடினர்.



சந்தோஷ்



சிவலிங்கம்



சுரேஷ்

### கோவில்பட்டி அருகே பொறியாளர் வீட்டில்

# 18 பவுன் நகை திருடிய வழக்கில் மேலும் 3 பேர் கைது

● கோவில்பட்டி

கோவில்பட்டி அருகே நாலாட்டின் புதூரில் பொறியாளர் வீட்டில் பூட்டை உடைத்து 18 பவுன் நகைகளை திருடிச் சென்ற வழக்கில் தொடர்புடைய மேலும் 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.

கோவில்பட்டி அருகே நாலாட்டின்புதூர் சக்கரத்தாழ்வார் தெருவை சேர்ந்தவர் ராஜ்குமார். ஜார்க்கண்ட் மாநிலத்தில் பொறியாளராக வேலை செய்கிறார். இவரது மனைவி டென்னிஸ் ராணி. இவர்களது மகன் ராசிபுரத்தில் உள்ள தனியார் பள்ளியில் 12-ம் வகுப்பு படிக்கிறார். டென்னிஸ் ராணி தனது மகனை பார்ப்பதற்காக கடந்த ஜூன் 11-ம் தேதி ராசிபுரம் சென்றார். இந்த நிலையில், மர்ம நபர்கள் இவரது வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று பீரோவில் இருந்த நகைகளை திருடி சென்றனர்.

இதுகுறித்து தகவலறிந்த டென்னிஸ் ராணி திரும்பி வந்து பார்த்தபோது பீரோவில் வைத்திருந்த சுமார் 18 பவுன் தங்க நகைகளை திருடிச் சென்றிருப்பது தெரிய வந்தது.

அவர் அளித்த புகாரின் பேரில் நாலாட்டின்புதூர் போலீஸார் வழக்குப்பதிந்து, இவ்வழக்கில் தொடர்புடைய ராதாபுரம் கேசவனேரி கே.வள்ளியூரைச் சேர்ந்த மாரிதுரை மகன் செந்தில்குமாரை கைது செய்தனர். விசாரணையில் அவர் அளித்த தகவலின் பேரில் ராதாபுரம் கேசவனேரி கிழக்கு தெருவை சேர்ந்த தங்கபாண்டியன் மகன் சிவலிங்கம் (39), ஈரோடு மாவட்டம் பவானி சிந்தாமணி சொசைட்டி பகுதியைச் சேர்ந்த மாரியப்பன் மகன் சுரேஷ் (25), கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த ராஜசேகர் மகன் சந்தோஷ் (30) ஆகிய 3 பேரையும் போலீஸார் கைது செய்தனர்.

### கயத்தாறு அருகே பணத்தகராறில்

# மூதாட்டியை கொலை செய்து எரித்ததாக கார் ஓட்டுநர் கைது

● கோவில்பட்டி

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு கரிசல்குளம்விலக்கு அருகே அடையாளம் தெரியாத மூதாட்டியின் சடலம் மீட்கப்பட்ட சம்பவத்தில் திடீர் திருப்பமாக அவரை கொலை செய்து எரித்ததாக கார் ஓட்டுநரை போலீஸார் கைது செய்தனர்.

கயத்தாறு கரிசல்குளம் விலக்கு அருகே மதுரை-திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் கடந்த 5-ம் தேதி தனியார் நிலத்தில் தீக்காயங்களுடன் இறந்து கிடந்த சுமார் 70 வயது மதிக்கத்தக்க மூதாட்டியின் சடலத்தை போலீஸார் மீட்டனர். அவர் யார்?, எந்த ஊரைச் சேர்ந்தவர்?, கொலை செய்யப்பட்டாரா? என்பது குறித்து கயத்தாறு போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இதில் சடலமாக மீட்கப்பட்டவர் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உள்ள படர்ந்தால் கிராமத்தைச் சேர்ந்த ராமர் மனைவி காந்திமதி (71) என்பதும், அவர் காணாமல் போனதாக சாத்தூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்திருப்பதும் தெரியவந்தது.

இந்நிலையில் பணத்தகராறில் மூதாட்டியை கொலை செய்து எரித்ததாக படர்ந்தால் கிராமத்தைச் சேர்ந்த வேல்பாண்டி மகன் கார் ஓட்டுநர் சண்முக பாண்டியனை போலீஸார் கைது செய்தனர்.

அவரிடம் போலீஸார் நடத்திய விசாரணையில், காந்திமதிக்கு சண்முக பாண்டியன் ரூ.1.50 லட்சம் கடன் கொடுத்துள்ளார். பணத்தை அவர் திரும்பத் தராமல் ஏமாற்றி வந்ததால், காந்திமதியை காரில் கயத்தாறு அருகே அழைத்து வந்து சண்முகபாண்டியன் தாக்கியுள்ளார். இதனால் மயங்கிய நிலையில் இருந்த அவரை கரிசல்குளம் காட்டுப் பகுதிக்கு கொண்டு சென்று கொலை செய்து, தீ வைத்து எரித்துள்ளது தெரியவந்தது.

கொலை செய்ய பயன்படுத்திய கார் மற்றும் ஆயுதங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

### குளத்தூர் அருகே மாட்டு வண்டி போட்டி

# ராமச்சந்திராபுரம் காளைகள் முதலிடம்

● கோவில்பட்டி

குளத்தூர் அருகே ராமச்சந்திராபுரம் கிராமத்தில் காளியம்மன், சந்தன மாரியம்மன், கிழவியம்மன் கோயில் ஆடித் திருவிழாவையொட்டி பொதுமக்கள் மற்றும் இளைஞரணி சார்பில் மாட்டுவண்டி போட்டிகள் இருபிரிவுகளாக நடத்தப்பட்டன.

> பொதுமக்கள் மற்றும் இளைஞரணி சார்பில் மாட்டு வண்டி போட்டிகள் இருபிரிவுகளாக நடத்தப்பட்டன.

முதலாவதாக நடந்த தேன்சிட்டு போட்டியில் 22 ஜோடி காளைகள் கலந்து கொண்டன. முதலிடம் பிடித்த ராமச்சந்திராபுரம் மதுமிதா காளைகளுக்கு ரூ.15 ஆயிரம், 2-வது இடம் பிடித்த மிளகுநத்தம் கவிநயா காளைகளுக்கு ரூ.10 ஆயிரம், 3-வது இடம் பிடித்த கொல்லம்பரம்பு கவுரி கருணாகர பாண்டியன் காளைகளுக்கு ரூ.8 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது.

தொடர்ந்து நடந்த பூஞ்சிட்டு போட்டியில் 36 ஜோடி காளைகள் பங்கேற்றதால் 2 பிரிவுகளாக போட்டி நடத்தப்பட்டது. முதலிடம் பிடித்த ராமச்சந்திராபுரம் செல்வமாதவன், மதுமிதா, அனைந்த மாடன்பச்சேரி ஜெயசூர்யா காளைகளுக்கு ரூ.20 ஆயிரம், 2-வது இடம் பிடித்த வரதராஜபுரம் முருகபெருமாள், புதூர் பாண்டியாபுரம் காசினி காளைகளுக்கு ரூ.15 ஆயிரம், 3-வது இடம் பிடித்த தூத்துக்குடி அஜித்குமார், இ.வேலாயுதபுரம் ஆறுதலின் ஏசு காளைகளுக்கு ரூ.10 ஆயிரம் பரிசாக வழங்கப்பட்டது.



கோவில்பட்டி அருகே காளாம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் 31 ஆண்டுகளுக்கு பிறகு சந்தித்துக் கொண்டனர்.

## 31 ஆண்டுகளுக்கு பின்னர் சந்தித்த அரசு பள்ளி மாணவர்கள்

● கோவில்பட்டி

கோவில்பட்டி அருகே உள்ள காளாம்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் கடந்த 1988 - 1993 வரை படித்த முன்னாள் மாணவர்கள், 31 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று சந்தித்துக் கொண்டனர்.

முன்னாள் மாணவர் ரவி வரவேற்றார். காளாம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் முனியசாமி தலைமை வகித்தார்.

1988 - 1993 வரை படித்த மாணவர்கள் சார்பில் "நம்ம ஊர், நம்ம ஸ்கூல்" திட்டத்தின் கீழ் ரூ.4 லட்சத்தில் புதிதாக கட்டப்பட்ட நவீன கழிப்பறை கட்டிடத்தை கோட்டாட்சியர் மகாலட்சுமி திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில், அப்பள்ளியின் முன்னாள் ஆசிரியர்களை, முன்னாள் மாணவர்கள் கவுரவித்தனர்.


UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோயில் பேருந்து நிறுத்தம் அருகில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோயில்-629001 தமிழ்நாடு

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | 22.07.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித்தொகை (EMD) |
|---|---|---|---|---|
| 1658210090000004 1. Mr.P.வினேஷ் 2. Mrs. நிதா T | (i) 06.08.2021 & 30.07.2021 அன்றுள்ளபடி ரூ.30,39,051/- (ரூபாய் முப்பது லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து ஐம்பத்து ஒன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 22.09.2022 & நேரடியான சுவாதீனம் 11.07.2024 | ரூ.43,82,047/- (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து நாற்பத்து ஏழு மட்டும்) | ₹ 42,12,000 (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து பன்னிரண்டாயிரம் மட்டும்) | ₹ 4,21,200/- (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்து ஒன்றாயிரத்து இருநூறு மட்டும்) |

சொத்து விவரம் : கன்னியாகுமரி பதிவு மாவட்டம், கொளச்சல் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, மறு சர்வே எண்.74/19, பழைய சர்வே எண்.1122, பட்டா எண்.12340, லட்சுமிபுரம் கிராமம் (தற்போது நெய்யூர்), கல்குளம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியில் 14 செண்ட் (566.58 சதுர மீட்டர்) நிலம் மற்றும் கட்டிடம், அனைத்து அனுபந்தங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: கோச்மணி பிள்ளை சொந்தமான சொத்து, கிழக்கு: பத்மநாப பிள்ளை சொந்தமான சொத்து, தெற்கு: ரோடு, மேற்கு: மாதவன் ஹரிதாஸ் சொந்தமான சொத்து.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 25.09.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

| விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: | சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் |
|---|---|
| 24.09.2024 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை | 23.09.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை |

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன் - Mob: 81470 01897, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் - Mob: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த் - Mob: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr. Prabhakaran (Mob: 74182 81709)) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

ஒப்பம்/-
தேதி: 18.08.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: பெங்களூரு உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்



வரி விளம்பரங்கள்

ஆட்கள் தேவை

அக்கவுண்ட்ஸ் / பைனான்ஸ்

Reqd Fresh Graduate For Bank Audit At Sivaganga Salary7k-10k M:9903285004




மணமகன் தேவை

தமிழ்

இந்து SC, PR, 35 அரசுப்பணி மாத வருமானம் ரூ.80000/- உள்ள விவாகரத்தான மணமகளுக்கு, Degree முடித்த அரசு / தனியார் பணியிலுள்ள புதிய / விவகாரத்தாகி குழந்தைகள் இல்லாத மணமகன் தேவை. தொடர்புக்கு 84389 81176

மணமகள் தேவை

தமிழ்

Radiologist 29/176/75/OBC seeks MBBS/MD bride. Mob: 9962553556 Email:vcaaaa@gmail.com



இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.



ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்

சட்ட மற்றும் ஆதரவுக் குழு
2வது தளம், கதவு எண்.31, பழைய எண்.14
தெற்கு மாடத் தெரு, மயிலாப்பூர்
சென்னை–600 004

சுவாதீன அறிவிப்பு

விதி 8(1) ன் கீழ் (அசையாச் சொத்துக்களுக்காக)

ஆக்சிஸ் பேங்க் லிட்.–ன் அதிகாரம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம், 2002, பிணைக்காப்பு (அமுலாக்கம்) விதிகளில் சட்டப்பிரிவு 13(12) உடன் கூடிய விதி 3–ன்படி, அறிவிப்பு நோட்டீஸ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதி அன்று, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/உத்தரவாதமளித்தவர்கள்/அடமானதாரர்கள் ஆகியோர்களின் திருப்பிச் செலுத்த வேண்டிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட விபரப்படியான தொகையை நோட்டீஸ் பெற்ற 60 நாட்களுக்குள் செலுத்துமாறு நோட்டீஸ் தரப்பட்டது.

மேற்படி கடன் தொகையைக் கடன் பெற்றவர்கள்/உத்தரவாதமளித்தவர்கள்/அடமானதாரர்கள் வங்கிக்கு திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டதால் மேலே குறிப்பிட்டுள்ள சட்ட செக்ஷன் 13(4) மற்றும் அதற்குரிய விதி 8 இதர விதிகளின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழே கையொப்பமிட்டவர் கீழே விவரித்துள்ள சொத்துக்களை கீழே பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடியான தேதியன்று சுவாதீனம் செய்து கொண்டுள்ளார் என்று கடன் பெற்றவருக்கும், உத்தரவாதமளித்தவர்களுக்கும், அடமானதாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

எனவே,குறிப்பாக கடன் பெற்றவர்களும்/உத்தரவாதமளித்தவர்களும்,அடமானதாரர்களும் மற்றும் பொதுமக்களும் இந்த சொத்தின் பேரில் எவ்வித ஒப்பந்தங்களும் செய்து கொள்ளக் கூடாதென்றும், அவ்வாறு செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய கீழ்க்கண்ட விபரப்படியான தொகை மற்றும் கூடியுள்ள வட்டித் தொகையையும், செலவுகளையும், இழப்பீடுகளையும் மற்றும் சொத்தினை பிணையப்படுத்தும் மற்றும் விற்பனை செய்யும் நடவடிக்கைகளின் செலவுகளையும் உள்ளடக்கியதாகவே இருக்கும் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

பிணையம் வைத்துள்ள சொத்துக்களை மீட்பதில் உள்ள கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ள இச்சட்டத்தின் உட்பிரிவு (8) பிரிவு 13க்கு, கடன்பெற்றவர்களது/உத்தரவாதமளித்தவர்களது/அடமானதாரர்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

வ.எண்.1 : (Ref.No.:6605) கடன்தாரர்கள் : 1. திரு.விக்னேஷ்குமார்.A, த/பெ.திரு.அந்தோணி மற்றும் 2. திருமதி.மாரியம்மாள்.A, க/பெ.திரு.அந்தோணி, எண்.5/87, நடுத்தெரு, வள்ளியம்மாபுரம், நைனாகரம், திருநெல்வேலி–627804 (இவ்விலாசம் இருவருக்கும் பொது). சொத்து முகவரி : 3. திரு.விக்னேஷ்குமார்.A, த/பெ.திரு.அந்தோணி மற்றும் 4. திருமதி.மாரியம்மாள்.A, க/பெ.திரு.அந்தோணி, S.F.எண்.185/3, P.எண்.164, வள்ளியம்மாபுரம் கிழக்கு பகுதி, நடுத்தெரு, நைனாகரம் இடைகால் சார் பதிவு அலுவலகம், தென்காசி–627804 (இவ்விலாசம் இருவருக்கும் பொது) ; கோரிக்கை அறிவிப்பு தேதி : 28.05.2024; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை : (கடன் கணக்கு எண். PHR025804684795) : 28.05.2024 அன்றுள்ளபடி ரூ.6,51,735 (இந்த தொகையானது 28.05.2024 வரை வட்டியுடன்)மற்றும் அதன் மீதான வட்டி, கட்டணங்கள், விளைவுகள், இலக்குகள் முதலானவை மற்றும் சொத்தினை தன்வசம் எடுத்துக் கொண்டது மற்றும் சொத்து விற்பனை தொடர்பான செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவுகளுடன். சுவாதீனம் எடுத்த தேதி : 14.08.2024.

அசையாச் சொத்து விவரம் : தென்காசி பதிவு மாவட்டம், இடைகால் சார் பதிவாளர் அதிகாரவரம்புக்குள் நைனாகரம் கிராமம் மற்றும் ஊராட்சி 2வது வார்டு, பிளாக் எண்.5, வள்ளியம்மாபுரம் நடுத்தெருவில் நத்தம் சர்வே எண்.185/3ல் உள்ள நிலங்கள், வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டதில் அடங்கிய மனை எண்.164ன் கிழபுறப்பகுதி நிலத்தின் அளவுகளாக கிழமேல் 15 அடி, தென்வடல் 34 அடி உள்ள 510 சதுர அடி = 47.39 சதுர மீட்டர் நிலமும் அதில் பிற அனைத்து மாமூல் உரிமைகளுடன் முழுவதுமாகக் கட்டப்பட்டுள்ளதும் கதவு எண்.5/106 கொண்டதுமான கட்டடமும் சேர்ந்த சொத்தின் எல்லைகள் : வடக்கு : நடராஜனின் வீடு, கிழக்கு : முப்பிடாதியின் வீடு மற்றும் தென்வடல் பொதுத்தடம், தெற்கு : கிழமேல் வீதி, மேற்கு : கணபதியின் வீடு.

வ.எண்.2 : (Ref.No.:6545) கடன்தாரர்கள் : 1. திரு.காசிராஜன்.G, த/பெ.M.கணேசன், எண்.54/5 நாயுடு தெரு, ராதாபுரம், திருநெல்வேலி–627111, மேலும் : எண்.74/14 மேட்டு தங்கம்மன் கோவில் தெரு, V.K. புரம், திருநெல்வேலி–627425. அலுவலக முகவரி : கள இயக்குபவர், M/s.நியூக்ளியர் பவர் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட், கூடங்குளம் அணுமின் திட்டம், கூடங்குளம் அஞ்சல், ராதாபுரம், திருநெல்வேலி–627 106. 2. திரு.பட்டுத்துரை.G, த/பெ.M.கணேசன், எண்.74/14 மேட்டு தங்கம்மன் கோவில் தெரு, V.K. புரம், திருநெல்வேலி–627425 ; கோரிக்கை அறிவிப்பு தேதி : 20.04.2024; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை : (கடன் கணக்கு எண். LPR025801814350) : 19.04.2024 அன்றுள்ளபடி ரூ.5,46,521/- (இந்த தொகையானது 19.04.2024 வரை வட்டியுடன்)மற்றும் அதன் மீதான வட்டி, கட்டணங்கள், விளைவுகள், இலக்குகள் முதலானவை மற்றும் சொத்தினை தன்வசம் எடுத்துக் கொண்டது மற்றும் சொத்து விற்பனை தொடர்பான செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவுகளுடன். சுவாதீனம் எடுத்த தேதி : 14.08.2024.

அசையாச் சொத்து விவரம் : திருநெல்வேலி மாவட்டம், விக்ரமசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட விக்ரமசிங்கபுரம் கிராம நத்தம் சர்வே எண்.353/2ல் அடங்கியதும் அதன் பகுதியுமான சொத்து, மேட்டு தங்கம்மன் கோவில் தெருவில், பழைய வார்டு எண்.8, புதிய வார்டு எண்.17ல் வடக்குப்புறம் பார்த்துக் கட்டப்பட்டுள்ளதும் கதவு எண்.74 கொண்டதுமான கட்டிடம் சேர்ந்த 1032.28 சதுர அடி அல்லது 95.90 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள சொத்தின் எல்லைகள் : வடக்கு : கிழமேல் வீதி, தெற்கு : கால்வாய், கிழக்கு : சங்கரலிங்கம் செட்டியார் நிலம், மேற்கு : பெரியசாமி ஆசாரி வீடு, சொத்து சேரன்மகாதேவி பதிவு மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் சார் பதிவு மாவட்டதில் அமைந்துள்ளது.

வ.எண்.3 : (Ref.No.:7451) கடன்தாரர் : 1. திரு.R.பெரியசாமி (கடன்தாரர்), த/பெ.திரு.ராமசாமி, எண்.4/102, அம்மன் கோவில் தெரு, கரைகண்டார்குளம், வெள்ளாளங்குளம், திருநெல்வேலி மாவட்டம்–627857 ; கோரிக்கை அறிவிப்பு தேதி : 08.05.2024; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை : (கடன் கணக்கு எண்கள் 918030103709711 & 918030103709740) : 08.05.2024 அன்றுள்ளபடி ரூ.15,61,002.86 (இந்த தொகையானது 08.05.2024 வரை வட்டியுடன்)மற்றும் அதன் மீதான வட்டி, கட்டணங்கள், விளைவுகள், இலக்குகள் முதலானவை மற்றும் சொத்தினை தன்வசம் எடுத்துக் கொண்டது மற்றும் சொத்து விற்பனை தொடர்பான செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவுகளுடன். சுவாதீனம் எடுத்த தேதி : 14.08.2024.

அசையாச் சொத்து விவரம் : அட்டவணை சொத்து : திரு.R.பெரியசாமிக்குச் சொந்தமான சொத்து : தென்காசி பதிவு மாவட்டம், வீரசிகாமணி சார் பதிவு மாவட்டம், வெள்ளாளங்குளம் கிராமத்தில், வெள்ளாளங்குளம் ஊராட்சி மன்றம், வார்டு எண்.4ல், கரைகண்டார்குளம் குடியிருப்பு நத்தம் சர்வே எண்.469/15ல் கிழமேல் 26 அடி, தென்வடல் 60 அடி ஆக உள்ள 1560 சதுர அடி அதாவது 144.93 சதுர மீட்டர் (00145 சதுர மீட்டர்) விஸ்தீரண சொத்தின் எல்லைகள் : கிழக்கு : தங்கராஜ் வீடு, தெற்கு : கிழமேல் தெரு, மேற்கு : துரையம்மாள் வீடு, வடக்கு : நடராஜன், செல்லதுரை வீடு. மேற்படி சொத்து வெள்ளாளங்குளம் ஊராட்சி மன்றம், மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அமைந்துள்ளது.

வ.எண்.4 : (Ref.No.:6581) கடன்தாரர்கள் : 1. திரு.மீரான் (சார்-கடன்தாரர் மற்றும் லேட்.திருமதி.நஜீமாவின் சட்டபூர்வ வாரிசுதாரர்), த/பெ.திரு.முகமது கனி, 2. திரு.முகமது கனி (சார்-கடன்தாரர் மற்றும் லேட்.திருமதி.நஜீமாவின் சட்டபூர்வ வாரிசுதாரர்), த/பெ.திரு.முகமது மற்றும் 3. திரு.முகமது இஸ்மாயில் (லேட்.திருமதி.நஜீமாவின் சட்டபூர்வ வாரிசுதாரர்), த/பெ.திரு.முகமது கனி, எண்.1A, பட்டாபத்து, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி மாவட்டம்–627006, மேலும் : மனை எண்.10, சர்வே எண்.104/1, P.T.கோடீஸ்வரன் நகர், பேட்டை கிராமம், திருநெல்வேலி மாவட்டம்–627006. திரு.மீரான் (சார்-கடன்தாரர் மற்றும் லேட்.திருமதி.நஜீமாவின் சட்டபூர்வ வாரிசுதாரர்), த/பெ.திரு.முகமது கனி, A.S.A.R. நைட்டி கடை, எண்.56, வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி மாவட்டம்–627006 ; கோரிக்கை அறிவிப்பு தேதி : 23.04.2024; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை : (கடன் கணக்கு எண். LPR025800436132) : 20.09.2023 அன்றுள்ளபடி ரூ.2,79,878/- (இந்த தொகையானது 20.09.2023 வரை வட்டியுடன்)மற்றும் அதன் மீதான வட்டி, கட்டணங்கள், விளைவுகள், இலக்குகள் முதலானவை மற்றும் சொத்தினை தன்வசம் எடுத்துக் கொண்டது மற்றும் சொத்து விற்பனை தொடர்பான செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவுகளுடன். சுவாதீனம் எடுத்த தேதி : 14.08.2024.

அசையாச் சொத்து விவரம் : காலஞ்சென்ற திருமதி.நஜீமா பெயரிலுள்ள அடமானச் சொத்தின் விபரம் : திருநெல்வேலி வருவாய் மாவட்டம், திருநெல்வேலி பதிவு மாவட்டம், பேட்டை சார் பதிவக எல்லைக்குள், திருநெல்வேலி தாலுகா, பேட்டை கிராமம், பேட்டை நகர்ப்புற ஊராட்சி, பேட்டை கிராம அயன் நன்செய் சர்வே எண்.103/3ல் மொத்தமுள்ள 51 சென்ட் நிலத்தில் மேற்புறமுள்ள 38 சென்ட் நிலம் தவிர்த்து மீதமுள்ள 13 சென்ட் நிலம் மற்றும் சர்வே எண்.104/1ல் உள்ள 41 சென்ட் ஆக மொத்தம் 54 சென்ட் நிலம் வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டதிலடங்கிய மனை எண்.10ல் வடபுறப்பகுதியிலுள்ள 1459.26 சதுர அடிக்கு சமமான 135.57 சதுர மீட்டர் (அல்லது) 3.35 சென்ட் நிலத்துடன் அதில் கட்டப்பட்டுள்ளதும், கதவு எண்.303A கொண்டதுமான வீடும் சேர்ந்த சொத்தின் எல்லைகள் : வடக்கே : சுந்தரமூர்த்தியின் நிலம், தெற்கே : மனை எண்.10ன் தென்புறப்பகுதி, கிழக்கே : சர்வே எண்.105/1A நிலம், மேற்கே : தென்வடல் வீதி.

தேதி : 14.08.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சென்னை ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்


எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).